நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 07.04.2022
---------------------------

<u>சாத்தூர் நகர்மன்றத்தின் அவசரக் கூ ட்டம் அறிவிப்பு</u>

நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ சுபகிருது வருடம் பங்குனி 28 ஆம் நாள் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11.04.2022ம் தேதியன்று திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்
சாத்தூர் நகராட்சி.

<u>பொருள் எண்: 1</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள தலைமை நீரேற்று நிலையம், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் இருக்கண்குடி மோட்டார் பம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் 2022–2023–ம் ஆண்டுக்கு ஒப்பந்தபணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண். 273/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 1, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 2</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் 2022–2023–ம் ஆண்டுக்கு ஒப்பந்தபணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண். 274/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 2, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 3</u>**

சாத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள அடிபம்பு மற்றும் விசைபம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் **2022–2023**–ம் ஆண்டுக்கு ஒப்பந்தபணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண். 272/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 3, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 4</u>**

சாத்தூர் நகராட்சி ஆணையர் அறையில் உள்ள ஏசி மற்றும் பொறியாளர் அறையில் உள்ள ஏசி பழுது ஏற்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக காப்பர் டியூப் வாங்கி பொருத்தும் பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை **ரூ.6850/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 270/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 4, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 5</u>**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 வண்டியில் ஜெட்ராய்டு மிஷினுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பேட்டரி முற்றிலும் செயல் இழந்து விட்டதால் புதிய பேட்டரி வாங்க ஆகும் உத்தேச செலவு தொகை **ரூ.6500/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 257/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 5, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 6</u>**

சாத்தூர் நகராட்சிக்கு **2021–2022**–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **ரூ.150.00** இலட்சத்திற்கு நவீன எரிவாயு தகன மேடை மற்றும் வார்டு எண்.**3**–ல் ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டபடி ஒப்பந்த அறிவிப்பினை மாநில அளவில் விளம்பரம் செய்தவைக்கு அதற்கான பட்டியல் கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. **24.11.2021**–ல் விளம்பரம்(முதல் அழைப்பு) – ரூ.**60375/–**
   (தமிழ் முரசு மற்றும் Times of India)
2. **04.12.2021**–ல் விளம்பரம்(இரண்டாம் அழைப்பு) – ரூ.**69615/–**
   (முரசொலி மற்றும் Times of India)
3. **22.12.2021**–ல் விளம்பரம் (மூன்றாம் அழைப்பு) – ரூ.**32105/–**
   (மாலை முரசு மற்றும் Business line)

4. 18.12.2021–ல் விளம்பரம் (பூங்கா மூன்றாம் அழைப்பு) – ரூ.16632/–
(மக்கள் குரல்)

5. 06.01.2022–ல் விளம்பரம் (நான்காம் அழைப்பு) – ரூ.23678/–
(மாலை முரசு மற்றும் Finance express) (எரிவாயு மட்டும்)
(ந.க.எண்.608/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 6, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 7</u>

சாத்தூர் நகராட்சிக்கு 2021–2022–ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இருக்கண்குடி மெயின் ரோடு முதல் நகராட்சி மயானம் வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 40/2022/சி3 நாள்: 25.01.2022–ல் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

(ந.க.எண்.05/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 7, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண்: 8</u>

சாத்தூர் நகராட்சிக்கு 2019–2020–ம் ஆண்டிற்கு விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சாத்தூர் நகராட்சிக்கு நான்கு வழிச்சாலை படந்தால் சந்திப்பு மேற்கு பக்கம் Stainless Steel பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4227/2019/சி10, நாள்:17.02.2022–ல் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

(ந.க.எண்.834/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 8, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண்: 9</u>

சாத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களான வடக்கு ரத வீதி கட்டணக் கழிப்பறை மற்றும் பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. வடக்கு ரத வீதியில் உள்ள கட்டணக் கழிப்பறையினை முழுமையாக இடித்துவிட்டு புதியதாக 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட உள்ளது. மேற்கண்ட கழிப்பறைக்கு தவறுதலாக தொழில்வரி தொகை கேட்பு பதிவாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்ட கேட்புத்தொகை ரூ.13,850/–ஐ தொழில்வரி கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.271/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 9, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 10

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் 2022–2023ம் ஆண்டுக்கு ஒப்பந்தபணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண். 282/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 10, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 11

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கட்செயலி (Whatsapp) செய்தியில் நகராட்சி பயன்பாட்டிற்கு புதிய ஈப்பு வாகனம் வாங்க அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் 1 ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட வாகனம் வாங்கப்பட்டு 9 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு இதுவரை 2 இலட்சம் கி.மீக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. அதனால் அடிக்கடி பழுது ஏற்பட்டு செலவினமும் அதிகமாக உள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு பிரதியோக குடிநீர் விநியோகம் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தினை சீராக கண்காணிக்கவும் அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையருக்கு ஒரு ஈப்பு வாகனமும், நகர்மன்ற தலைவர் மற்றும் பொறியாளர் அவர்களின் பயன்பாட்டிற்கும் ஒரு ஈப்பு வாகனமும் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

2 புதிய பொலிரோ ஈப்பு வாகனம் வாஙகுவதற்கான உரிய திட்ட கருத்துருவினை மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பித்தவைக்கு மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண். 280/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 11, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 12

சாத்தூர் நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர் தேர்ந்தெடுப்பதற்கான உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று வருவதால் அதன் முதல் கூட்டம் 02.03.2022–ம் தேதி நடத்தப்படவுள்ளதால் புதிய அலுவலக கட்டிடத்தில் நகர்மன்ற கூட்ட அரங்கினை தயார் செய்யும் பொருட்டு பழைய அலுவலக கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் உள்ள சுற்றுவட்ட மேசையினை கழற்றி அதில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தும் வாரினிஷ் பூசியும் இருக்கைகளுக்கு வாரினிஷ் பூசி புதிய நகர்மன்ற கூட்ட அரங்கில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

போதிய கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை செய்தமைக்கும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1387/2017/அ1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 12, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள பெரிய டேங்கர் லாரி TN67 A 7796 வண்டிக்கு தகுதிச்சான்று **15.03.2022**–உடன் முடிவு பெறுவதால் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பொருட்டு வண்டியில் உள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மதுரை டிவிஎஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.**95,000/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

பழுது விபரம்

1. வாகனம் கம்பிளிட் வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. இன்ஜின் ஆயில் சர்வீஸ், டீசல் பில்டர், கியர் ஆயில் மாற்ற வேண்டும்.
3. கியர் பாக்ஸ், கிரெனன் ஆயில், ஸ்டேரிங் ஆயில், குலாண்டு ஆயில் டாப் செய்ய வேண்டும்.
4. கிளட்ச் வேலை பார்க்க வேண்டும்.
5. நான்கு வீல் கீரிஸ் பேக்கிங் செய்ய வேண்டும்.
6. ஆல்டர்னேட் டயனமோ வேலை பார்க்க வேண்டும்.
7. 1 ¾ வாட்டர் ஏஸ் 100 மீட்டர் மாற்ற வேண்டும்.
8. 100 மீட்டர் வயர் 1.5 ஆஆ புதியது மாற்ற வேண்டும்.
9. கிஸ்பின் எண்டு ராடு வேலை பார்க்க வேண்டும்.
10. கம்பிளிட் டிங்கர் வேலை பார்க்க வேண்டும்.
11. வாகனம் முழுவதும் பெயிண்டிங் அடிக்க வேண்டும்.
12. வாகனத்திற்கு வாசகங்கள் எழுத வேண்டும்.
13. செல்ப் மோட்டார் சர்வீஸ் செய்ய வேண்டும்.
14. கம்பிளிட் எலக்ட்ரிசன் வேலை பார்க்க வேண்டும்.

**(ந.க.எண். 199/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 13, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

சாத்தூர் நகராட்சியில் **2021–2022**–ம் ஆண்டிற்கு **15**–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**16** வடக்கு ரத வீதியில் புதிய கழிப்பறை (6seats) கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு **15.03.2022**–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.017% குறைவு

2. திரு.பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.009% குறைவு

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.880/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 14, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 15</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு 15–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.1 பெரியார் நகரில் உள்ள பூங்காவிற்கு வேலி (L=150.00m) அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 15.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.ஞானசேகரன் – மதிப்பீட்டை விட 0.006% குறைவு

2. திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.0009% குறைவு

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.880/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 15, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 16</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு 15–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடி சாலையில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு 15.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. குருசாமி – மதிப்பீட்டை விட 0.13% குறைவு

2. திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.2% குறைவு

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.880/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 16, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 17</u>

சாத்தூர் நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டிற்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு 29.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.முத்துராமலிங்கம் | – | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.09% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு..எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.274/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 17, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 18</u>

சாத்தூர் நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டிற்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அடிபம்பு மற்றும் விசைபம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுவதற்கு 29.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.முத்துராமலிங்கம் | – | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2. | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.08% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு..எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.272/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 18, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 19</u>

சாத்தூர் நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டிற்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து நகராட்சி பகுதிக்குட்பட்ட மினிபவர் பம்பு, தலைமை நீரேற்று நிலைய மோட்டார்கள் மற்றும் இருக்கண்குடி மோட்டார் பம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு 29.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.முத்துராமலிங்கம் | – | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |
| 2. | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.07% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.273/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 19, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 20</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு எண்.1 பைபாஸ் ரோடு பெரியார் நகரில் உள்ள பூங்காவில் விளையாட்டு உபகரணங்களை வாங்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 30.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஞானசேகரன் | – | மதிப்பீட்டை விட 0.005% குறைவு |
| 2. | திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட 0.002% குறைவு |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.06/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 20, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 21</u>

சாத்தூர் நகராட்சியில் 2019–2020–ம் ஆண்டிற்கு விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாத்தூர் நகராட்சி – வழி மதுரை மெயின் ரோடு மேற்கு பக்கம் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 30.03.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.017% குறைவு

2. திரு.பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.007% குறைவு

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.834/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 21, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 22**

சாத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 30 எச்.பி சப் மோட்டார் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள 24.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் – ரூ.37,700/–

2. மகேஸ்வரி எலக்ட்ரிக்கல் – ரூ.43,000/–

அலுவலக குறிப்பு:

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.21/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 22, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 23**

சாத்தூர் நகராட்சியில் 2022–23 ஆண்டிற்கு நகராட்சி மூலம் புதிதாக வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கிட அரசாணை எண். 97/12.07.2007–ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 748/08 குடிநீர் வழங்கல் துறை நாள்: 21.09.2009–ன் படியும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நடப்பாண்டான 2022–23க்கு ஏப்ரல் 2022 முதல் புதிதாக பெறப்படும் குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்பங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணம் செய்து வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பதிவுக் கட்டணம் | ரூ.110/– |
| 2. | **வைப்புத் தொகை**<br>அ) வீட்டு பயன்பாடு<br>ஆ) வீட்டு பயன்பாடல்லாதவை | <br>ரூ.7000/–<br>ரூ.16,000/– |

**சாலை சீரமைப்பு கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
| | | கட்டணம் | கட்டணம் | கட்டணம் |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2000/– | 4260/– | 4925/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 3310/– | 5400/– | 6065/– |
| மேற்பார்வைக் கட்டணம் | | | | |
| 4. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
| | | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 460/– | 980/– | 1130/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 760/– | 1240/– | 1215/– |
| 5. | ஆய்வுக் கட்டணம் | | | ரூ. 1500/– |

(ந.க.எண். 201 /2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 23, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 24</u>**

அரசாணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 25.06.2008 மற்றும் தமிழ்நாடு சட்டம் எண்.36/2008ல் நிலுவை வரி மற்றும் வரியில்லா இனங்களை பிடித்தம் செய்ய காலவரம்பு நிர்ணயம் செய்ததை உயர்வு செய்து திருத்தம் தமிழ்நாடு அரசிதழ் பகுதி–4 பிரிவு எண்.168 (Tamil Nadu Cazettee, Part-II Section 2–No.168) நாள்:30.05.2008ல் வெளியிடப்பட்டுள்ளது மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.70035/2005/ஆர்1, நாள்:11.03.2009ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 345ல் மூன்று ஆண்டுகள் என்பது 12 ஆண்டுகள் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது மற்றும் கட்டணங்கள் அந்தந்த நிதியாண்டின் இறுதியிலும் காலாவதியாகின்றன. இனி இவற்றை சட்ட ரீதியாக வசூலிக்க இயலாது.

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81(3)ன்படி காலியிடவரி வசூலிக்கப்படுகிறது. 01.10.2009க்கு முன்னர் காலியிடவரியானது நிலத்தின் மொத்த மதிப்பில் குறிப்பிட்ட சதவீதம் நகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வந்தது.

அரசாணை 151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 02.08.2009ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் காலியிடவரி விதிப்பு செய்து வசூல் செய்வது குறித்து நெறிமுறைகள் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.1957/97/ஆர், நாள்:01.07.1998ன்படி, அதிகபட்சமாக தணிக்கையாண்டின் 13 அரையாண்டுகள் முன்னிட்டு காலியிடவரி விதித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பத்திர பதிவு நாள் அல்லது 13 அரையாண்டுகள் இதில் எது முந்தையதோ அதன்படி காலிமனைவரி விதித்திட வேண்டும்.

இந்நிலையில், சாத்தூர் நகராட்சியில் களஆய்வு செய்த போது திரட்டப்பட்ட சொத்துவரிகளின் மீதான கோப்புகளை ஆராய்ததில் தற்போது சொத்துவரி வசூலிக்கப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு காலியிடவரி வசூலிக்கப்பட்ட நிலையிலும் கணிப்பொறி கேட்பில் காலியிடவரி இரத்து செய்யாமலேயே இருந்து வந்துள்ளது தெரியவந்தது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118ன்படி 1997–1998 முதல் 2009–2010 வரை காலங்கடந்த காலியிடவரி தொகை ரூ.2,46,442/– மற்றும் 2010–2011 முதல் 2021–2022 வரையிலான காலங்களில் சொத்துவரி விதிக்கப்பட்ட இனங்களுக்குரிய காலியிடவரி கணிப்பொறியில் இரத்து செய்யப்படாமல் உள்ள தொகை ரூ.15,41,517/– இனங்களை இரத்து செய்ய தீர்மானிக்க மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.1012/2018/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 24, நாள்: 11.04.2022**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்புக்கு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 25</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வெளியே பேருந்து நிலைய நுழைவு வாயிலில் உள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு (2022–2023 முதல் 2024–2025ம் ஆண்டு வரை மூன்றாண்டுகளுக்கு) 15.03.2022ம் தேதியன்று மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு குத்தகைதாரர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டதால் ஏலம் நடத்தப்படவில்லை மற்றும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளிக்கு மட்டும் கேட்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ஓராண்டுக்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்வி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.மு.ஞானசேகரன்,<br>த/பெ.ரா.முடியப்பன்,<br>80, நென்மேனி ரோடு, சாத்தூர். | 2,71,111 |
| 2 | திரு.சோலைசெல்வம் ஐயப்பசாமி,<br>3–31, சுந்தரக்குடும்பன்பட்டி,<br>செட்டுடையான்பட்டி (அஞ்சல்), சாத்தூர். | –– |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.மு.ஞானசேகரன் என்பவர் வைப்புத் தொகை ரூ.60,000/–மும், சொத்துமதிப்பு சான்று ரூ.62,00,000/–க்கும் கொடுத்துள்ளார். திரு.சோலைசெல்வம் ஏலதாரர் வைப்புத்தொகை ரூ.60,000/–மும் மற்றும் சொத்துமதிப்பு சான்றிற்கு பதிலாக ரூ.90,000/–த்தை வங்கி வரைவோலையாக கொடுத்துள்ளார். ஒரே ஒரு ஏலதாரர் மட்டும் கலந்து கொள்வதால் பொது ஏலம் வைக்கப்படவில்லை. மேலும் மேற்படி குத்தகை இனத்திற்கு சுமார் 10 முறை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. 15.03.2022

அன்று வரப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளிக்கு கேட்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மூன்றாண்டு சராசரி தொகையைவிட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஒப்புக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1064/2017/சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 25, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 26</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் வெம்பக்கோட்டை ரோட்டில் மதுரை செல்லும் பேருந்துகள் நிறுத்தும் இடத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம், மதுரை வெம்பக்கோட்டை சாலையில் உள்ள கட்டணக்கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வெள்ளக்கரை சாலையில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனங்களுக்கு 15.03.2022ம் தேதியன்று மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வராததால் மீண்டும் மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1064/2017/சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 26, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 27</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு 2021–2022ம் ஆண்டுக்கான சாலைவரி மற்றும் பசுமை வரி மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தொகை ரூ.51,232/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1064/2017/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 27, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 28</u>**

சாத்தூர் நகராட்சி 2022–2023ம் ஆண்டு வரவு செலவு உத்தேச திட்ட மதிப்பீடும், 2021–2022ம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.457/13/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 28, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 29</u>

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் சாத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.21 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 3.04 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 7.67 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 2.44 |
| | **மொத்தம்** | **13.36** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **81–**A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.**40032/2012/**ஆர்**1**, நாள்.**01.04.2022** ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், சாத்தூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) **600** சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **25**% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) **601** முதல் **1200** சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **50**% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) **1201** முதல் **1800** சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **75**% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) **1800** சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **10**0% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் **100**% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் **75**% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, **1** சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு **100** சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் **6** % உயர்வு அல்லது கடந்த **5** ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அ) **01.04.2022** முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொதுமக்களுக்கு சொத்துவரி சீராய்வு குறித்து தினசரி நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்திடவும், அரசிதழில் வெளியிடுவதற்கும் மற்றும் படிவங்கள் அச்சடிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.**637/2018/**அ**1**)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 29, நாள்: 11.04.2022**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்புக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 30

இந்நகராட்சியின் ஒப்பந்தப்பணிகளை எடுத்துச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்துள்ளனர். அன்னார் இந்நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொழில்வரி செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. மேற்கண்ட நிலுவைத் தொகையினை அன்னார் பணி செய்த வகைக்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகையானது காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தொழில்வரி தொகை ரூ.68,910/–ஐ ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

இந்நகராட்சியின் ஆண்டுக்கணக்கு 31.03.2022க்குள் முடிக்கப்பட இருப்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஈடு செய்தமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.278/2022/எப்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 30, நாள்: 11.04.2022**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(ஒம்) ச. குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**